**அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்- 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரிவு 06(2)(அ) | ஊழியர் முற்றாக சேவை செய்துள்ள ஒவ்வொரு ஆண்டிற்காக அரை மாதத்திற்கான சம்பளம் அல்லது வேதனம் | பணிக்கொடை கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டது எனவும் | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஊழியர் பணிக்கொடை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையில் ஊழியர் பணிக்கொடை ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு பதிலாக ஊழியரின், முழு மாத சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு என ரூபா 2.46 மில்லியன் தொகை மிகையாக செலுத்தப்பட்டடிருந்தது. | மற்றும் எதிர்காலத்தில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என. | ஒதுக்குவதற்கும், செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2009 நவம்பர் 13 திகதிய 438 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 103, 104 மற்றும் 105 | 2020 திசெம்பர் 31 அளவில் பயன்படுத்த முடியாதிருந்த ரூபா 5,959,483 கிரயத்தை உடைய மூலப்பொருள் இருப்பு, ரூபா 6,030,600 தொகை கிரயத்தை உடைய நடைபெறுவேலை பண்ட இருப்பு, ரூபா 3,383 கிரயத்தை முடிவுப் பொருள் இருப்பு மற்றும் ரூபா 59,259,389 தொகை மொத்தக் கிரயத்தை உடைய நிலையான சொத்து அலகுகள் 346 முறைப் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கும், பயன்படுத்த முடியாத இருப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி விசாரணை மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்கும் அல்லது உரிய முறையை நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நியமனம் செய்யப்பட்ட கணிப்பீட்டு சபையினால் உரிய அனைத்து விடயங்களையும் இனங்கண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மிக விரைவாக அப்புறப்படுத்துவற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி சொத்துக்கள் முறைப்பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பயன்படுத்த முடியாத இருப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் விசாரணை மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை தீர்மானிப்பதற்கும் உரிய முறையில் நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 ஜூலை 23 திகதிய PED/A/ Surplus/1/11(i) இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் கடிதம் | மீளாய்வாண்டின் போது திறைசேரிக்கு உரித்தாக்கியிருந்த திறைசேரி நிதிய முதலீடுகள் ரூபா 24,632,603 தொகை திறைசேரியின் வரிச்செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான திறைசேரியின் பங்களிப்பு என வேறு எந்த ஏற்பாடுகளும் மேற்கொண்டிருக்கவில்லை. | திருத்திய கணக்குகளின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளதுடன், அதனை விஷேட வரி செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | திறைசேரியின் பங்களிப்புக்காக போதியளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 18 திகதிய பீஈடீ 03/2020 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு ஊழியருக்கு வருடாந்தம் ரூபா 13,500 தொகை பணிக்கொடை கொடுப்பனவு என செலுத்த முடியும் எனினும் கூட்டுத்தாபனத்தினால் அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்கான ஒரு ஊழியரின் மாதாந்த சம்பளம் விஷேட பணிக்கொடை கொடுப்பனவு எனவும், ஒரு ஊழியருக்கு ரூபா 5,000 அல்லது ரூபா 10,000 தொகையும் தலைவர் பணிக்கொடை எனவும் செலுத்தப்பட்டிருந்தது.<br>அதன்படி சுற்றறிக்கையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த வரையறையை மிகைத்து முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது பணிக்கொடை கொடுப்பனவு என ரூபா 16,577,284 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | 2020 ஆண்டின் போது முழு இலங்கையும் பாதித்திருந்த கொவிட் தொற்றுநோயிற்கு மத்தியில் அரசாங்க வைத்தியசாலைக்கு தேவையான மருந்துத் தேவையினை நிறைவேற்றுவதற்கு அனைத்து ஊழியர்களும் தொடர்ந்தும் சேவையாற்றினார்கள் எனவும் அந்த சேவைக்கு மதிப்பளிப்பதற்காகவும் தொடந்தும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் குறிப்பிட்ட விஷேட பணிக்கொடை மற்றும் தலைவர் பணிக்கொடை செலுத்தப்பட்டது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முரணாக செயற்படுவதற்கு சுற்றறிக்கை வெளியிட்டுள்ள திணைக்களத்தின் முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (உ) | 1997 பெப்ரவரி 03 திகதிய 6/97 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 2 | பதில் கடமையாற்றும் காலம் 03 மாத கால உச்ச எல்லையாக இருக்க வேண்டியதுடன், பிரதி பொது முகாமையாளர் பட்டியல் மற்றும் ஆய்வு பதவிக்காக தொடர்ச்சியாக 03 வருடங்களை விட மிகையான காலம் பதில் கடமையாற்றும் அடிப்படையில் | அந்த பதவியில் கடமையாற்றிய பெண் உத்தியோகத்தர் விலகிச் சென்றமையால் அப் பிரிவின் முகாமையாளராக கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவரை பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டது | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிந்தார். | எனவும், அவர் உச்சமட்ட அளவில் பதவியின் கடமைகளை நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறார் எனவும். பல சந்தர்ப்பங்களில் அப் பதவிக்காக ஆட் சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் தகைமை உடைய விண்ணப்பதாரிகள் எவரும் விண்ணப்பித்திருக்கவில்லை. எனவும் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன எனவும், இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு விடயத்தை விளக்குவதற்காக பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், அது தொடர்பாக பணிப்பாளர் சபையினால் வழங்கப்படும் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | |
| (ஊ) | 2008 திசெம்பர் 31 திகதிய 30/2008 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்தக்கூடிய உச்சமட்ட இடர் கடன் தொகை ரூபா 250,000 தொகை என வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 101 உத்தியோகத்தர்களுக்கு அந்த வரையறையை மிகைத்து இடர் கடனாக மொத்தத் தொகை ரூபா 12,429,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த பொது நிருவாக சுற்றறிக்கை விஷேடமாக அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு மட்டும் பொருத்தமானதாக இருப்பதெனவும், அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் போன்ற சபைகளுக்காக கூட்டுத்தாபனங்கள் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை ஏற்புடையதாக உள்ளது என | கூட்டுத்தாபனத்துக்கு பொறுத்தமான தாபனக் கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் வரை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை மற்றும் பொது நிருவாக சுற்றறிக்கையை பொருத்தமாக்கிக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) 2009 மார்ச் 09 திகதி டீஎம்எஸ்/ஈ4/10/4/090/2 இலக்கம் கொண்ட சுகாதார போசாக்கு மற்றும் தேசிய வைத்திய அமைச்சுச் செயலாளரை விழித்துள்ள முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதம் | | | |
| (i) பந்தி 02-01 | கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தருக்கு தூரத்தின் அளவினை கவனத்தில் எடுத்து போக்குவரத்துப் படி செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், தூரத்தின் அளவினை கவனத்தில் எடுக்காமல் 2009 ஆண்டு முதல் மாதாந்தம் முறையே ரூபா 4,700 மற்றும் ரூபா 3,000 இற்கான போக்குவரத்துக் கொடுப்பனவு ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆண்டு முதல் பணிப்பாளர் சபையின் தீர்மானம் ஒன்றின் படி அந்த மாதாந்த கொடுப்பனவு முறையே ரூபா 8,000 மற்றும் ரூபா 6,000 தொகை வரை அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பணிப்பாளர் சபை தீர்மானத்தை செயற்படுத்துவற்கு முன்னர் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இது வரை வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுக்காக அனவல் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பந்தி 02-02 | பதவியணி அங்கத்தவர்களுக்கு மாதாந்த உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒன்றாக ரூபா 4,000 மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு இணங்காமல் 2011 ஜுலை 01 திகதி முதல் மாதாந்தம் உச்ச மட்டம் ரூபா 12,000 என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த பதவியணிக்கு உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.<br>அதன்படி மீளாய்வாண்டின் போது மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 18,999,486 தொகையும் உட்பட | 2009 ஆண்டின் போது முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கும் போது உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு ரூபா 4,000 தொகையாக இருந்தது எனினும், பண வீக்கத்தை கவனத்தில் எடுத்து 2019 ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 12,000 தொகை என அதிகரிக்கப்பட்டது எனவும், இது விடயம் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 2011 ஜுலை 01 திகதி முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு என மிகையாக செலுத்தியிருந்த தொகை ரூபா 121,234,241 ஆகும். | தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பி அங்கீகரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (iii) பந்தி 02-03 | (i) நாளாந்த வரவுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு என ஒரு மாதத்திற்கு ஒரு ஊழியருக்கு ரூபா 2,000 தொகை மாத்திரம் செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அதனை ரூபா 3,500 தொகை வரை அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. | பண வீக்கத்தை கருத்தில் எடுத்து 2019 ஆண்டின் போது பணிப்பாளர் சபை ஆங்கீகாரத்தின் படி நாளாந்த வரவுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 3,500 தொகை என அதிகரிக்கப்பட்டதெனவும், இந்த விடயம் தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு மீண்டும் கடிதம் அனுப்பி அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| | (ii) நாளாந்த வரவு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படின் வருட இறுதியில் உள்ள மீதியான விடுமுறைகளுக்காக பணம் செலுத்த முடியாது எனினும், தின வரவுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த ஊழியர்களுக்கு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியான விடுமுறைகளுக்காக ரூபா 12,475,703 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த விடயம் தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு மீண்டும் கடிதம் அனுப்பி அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| | (iii) சித்தரைப் புத்தாண்டு மற்றும் நத்தாளுக்காக ஒருவருக்கு ஒருமுறை மாத்திரம் ரூபா 6,000 இற்காக பரிசு வவுசர் வழங்க முடியும் எனினும், மீளாய்வாண்டின் போது நிரந்தர ஊழியர்களுக்கு ரூபா 25,000 தொகை | பண வீக்கத்தை கவனத்தில் எடுத்து 2019 ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி புத்தாண்டுக் கொடுப்பனவு ரூபா 25,000 தொகை எனவும் நத்தல் கொடுப்பனவு ரூபா 12,500 தொகை எனவும் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீதமும் பயிற்சி பெறும் ஊழியர்களுக்கு ரூபா 12,500 தொகை வீதமும் மொத்தப் பெறுமதி ரூபா 7,325,000 தொகைக்கான பரிசு வவுசர்களும் அதற்கு மேலதிகமாக பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் பெற்றுக்கொள்வதற்காக நிரந்தர ஊழியர்களுக்கு ரூபா 12,500 தொகை வீதம் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு ரூபா 6,250 தொகை வீதம் மொத்தப் பெறுமதி ரூபா 4,712,500 தொகைக்கான பரிசு வவுசர்கள் வழங்கப்பட்டிருந்தன. | அதிகரிக்கப்பட்டது. மற்றும் இந்த விடயம் தொடர்பாக இந்த விடயம் தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு மீண்டும் கடிதம் அனுப்பி அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| | (iv) பந்தி 02-06 | ஏதேனும் ஒரு ஊழியர் குறிப்பிட்ட சேவை முறை மாற்றம் அனைத்துக்கும் வருகை தந்தால் ரூபா 1,000 தொகை மாதாந்தக் கொடுப்பனவு மாத்திரம் செலுத்த முடியும் எனினும், பங்குபற்றிய ஒவ்வொரு சேவை முறை மாற்றங்கள் தொடர்பாகவும் நிறைவேற்று, பயிற்சி பெறும் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத ஊழியர்களுக்கு முறையே ரூபா 400 தொகை, ரூபா 300 தொகை மற்றும் ரூபா 200 தொகை வீதம் மீளாய்வாண்டின் போது ரூபா 6,981,100 தொகை சேவை முறைமாற்றக் கொடுப்பனவு என செலுத்தப்பட்டிருந்ததுடன்மிகை யாக செலுத்தப்பட்டிருந்த சேவை முறை மாற்றுக் கொடுப்பனவு ரூபா 3,549,100 தொகையாக காணப்பட்டது. | தற்போது இந்த அனைத்துக் கொடுப்பனவுகளும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்படுகின்றன எனவும், மற்றும் இது தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (ஏ) | 2015 ஜூன் 04 திகதிய BP/30/15 இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானம் | கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற துவிச்சக்கர வண்டிக் கடன் 2015 ஜூன் 04 திகதி முதல் ரூபா 3,000 தொகையில் இருந்து ரூபா 20,000 தொகை வரை அதிகரித்திருந்த போதிலும் | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,017,364,317 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 434,777,878 தொகை ஆகும். அதன படி நிதி விளைவுகளில் ரூபா 582,586,439 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு விற்பனை வருமானம் 35 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான செலவு விடயங்களில் போக்குப் பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் விற்பனைகள் மற்றும் வினியோகச் செலவுகள் முறையே ரூபா 99,189,983 தொகை மற்றும் ரூபா 49,137,643 தொகையாகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது அந்த செலவுகள் 50 சதவீதத்தினால் குறைந்திருந்தது. அதில் அடங்கியிருந்த விற்பனை மேம்பாட்டுச் செலவுகள் 86 சதவீத்தினால் குறைந்திருத்தல் அதற்கான முக்கிய காரணமாக இருந்ததுள்ளது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதாசாரம் மற்றும் தேறிய இலாப விகிதாசாரம் முறையே 1.9 சதவீதத்தினால் மற்றும் 4.7 சதவீதத்தினால் கடன்பட்டோர் புரள்வு வீதம் 3.6 தவணைகளினால் அதிகரித்திருந்ததுடன் கடன் அறவீடு செய்யும் காலம் 64 நாட்களினால் குறைந்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கொள்வனவு செய்திருந்த மருந்து மூலப்பொருட்கள் 3,105.25 தொகை கிலோகிராம் மற்றும் பொதி செய்யும் பொருட்கள் இருப்பு 292,938 அலகுகள் பல்வேறு காரணங்களினால் மீளாய்வாண்டின் போது தள்ளுபடி செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 3,429,299 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | காலவதியாதல், இயந்திரத்தின் மூலம் தள்ளுபடி செய்தல் மற்றும் பொதிகள் சேதமடைதலினால் தள்ளுபடியாதல் மற்றும் புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டமையால் இருப்புக்கள் பயன்படுத்தப்படாது அகற்றப்படல் ஆகிய காரணங்களினால் இந்த இருப்புக்கள் தள்ளுபடி செய்யப்படல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மூலப்பொருட்கள் மற்றும் பொதி செய்யும் பொருட்கள் தரம் அற்றவையாக இருத்தல் மற்றும் காலவதியாதல் தொடர்பாக முறையான பரிசோதனை மேற்கொண்டு நட்டத்துக்கு பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினர் இருந்தால் அவர்களை இனங்காண்பதற்கு மற்றும் நட்டத்தை உரிய முறையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், இருப்புக்கள் முறைப் பிரகாரம் அப்புறப்படுத்தப்பட்டு |

| | | |
|---|---|---|
| | | புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுவான பரிசோதனை ஆய்வு கூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை ஒன்று நிறுவும் குறிக்கோளுடன் மொத்தத் தொகை ரூபா 133,767,599 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு நவீன மயப்படுத்தியிருந்த கட்டிடம் ஒன்று 2019 ஆகஸ்ட் 20 திகதி முதல் 2021 ஒக்தோபர் 31 திகதி வரையும் விளைவற்று மூடப்பட்டிருந்ததுடன் ஆய்வுகூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை நிறுவுவதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஏனைய தேவைகள் எதற்கும் கூட்டுததாபனத்தின் முன் திட்டமிடல் அல்லது தயாரித்தல் காணப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | களுத்துரை, வெலிப்பன்ன மற்றும் புலத்சிங்கள பிரதேசங்களை சார்ந்த மருந்து உற்பத்தி கைத்தொழில் வலயம் ஒன்று (Proposed Pharma zone) ஏற்படுத்துவதற்காக 2017 ஆண்டின் போது தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் இந்த ஆதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதெனவும் கூட்டுத்தாபனத்துடன் பங்குடைமை ஆரம்பிப்பதற்கு கைத்தொழிற்சாலைகளின் ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கும் நிலையம் ஒன்று மற்றும் உற்பத்தி செய்யும் மருந்துகளின் நியமத்தை பேணிச் செல்வதற்காக பொதுவான பரிசோதனை ஆய்வுகூடம் ஒன்று இங்கு நிறுவுவதற்கு எதிர்பார்க்கப் பட்டதுடன் மற்றும் இந்த அலுவல்கள் மேற்கொள்வதற்கு முடியாமல் போணமையால் இந்த ஆதனங்களை விற்பனை செய்தல் தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | கட்டிடத்தின் பயன்பாட்டிற்காக நிச்சயிக்கப்பட்ட திட்டம் ஒன்றின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 ஆகஸ்ட் 06 ஆந் திகதி நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 89,898,864 தொகை செலவிடப்பட்டு Cephalexin தொழிற்சாலை நவீன மயப்படுத்தப்பட்டு 2019 ஆகஸ்ட் 09 திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் Cephalexin மருந்து உற்பத்திக்குத் தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு அல்லது தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பின்னர் அதில் Levothyroxin tablets IP 50mg உற்பத்தியை ஆரம்பிப்பதற்காக | அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளில் இருந்தும் Cephalexin capsules மருந்துக்காக காணப்பட்ட மிகைக் கேள்வியின் காரணத்தினால் Cephalosporin தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது எனவும், எனினும் தொழிற்சாலையின் வேலைகள் பூர்த்தி செய்யும் போது இந்த மருந்துக்காக போதியளவு கேள்வி ஒன்று காணப்படவில்லை எனவும் அதன் படி Cephalexin capsules மருந்திற்கு பதிலாக Levothyroxin tablets மற்றும் Flucloxacillin capsules உற்பத்தி செய்வதற்கு | முதலீடுகளின் மூலம் உச்ச மட்ட பயன்பாட்டை பெறக் கூடியவாறு அதற்குரிய ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டு 2020 திசெம்பர் 23 திகதி தொழிற்சாலை வளவினை திறந்து வைக்கும் ஆரம்ப விழா நடாத்துவதற்காக ரூபா 3,798,296 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2021 ஒக்தோபர் 31 திகதி வரை இவ் உற்பத்தி நிலையத்தில் வாணிப அடிப்படையில் மருந்துகள் ஏதும் உற்பத்தி செய்திருக்கவில்லை. | பின்னர் தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதற்காக மருந்து பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மூலம் இது வரை அங்கீகார் வழங்கி இருக்காததுடன் மற்றும் ஆரம்ப மேற்பார்வையின் பின்னர் பல மாற்றங்கள் மேற்கொள்ளல் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அவ் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது இரண்டாவது மேற்பார்வைக்கு தயார் நிலையில் காணப்படுகின்றது எனவும். | |
| (இ) | மொத்தக் கிரயம் ரூபா 328,849,588 தொகைக்கான நடைமுறையல்லாத சொத்துக்களின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படக் கூடிய ஆயுற்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்திருக்கவில்லை. | எமது நிறுவனத்தின் மூலம் நிலையான சொத்துக்கள் தொடர்பான அனைத்து அலுவல்களும் மேற்கொள்வதற்கு நிலையான சொத்துக்கள் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது எனவும், அந்தக் குழுவின் மூலம் நிலையான சொத்துக்களின் தரம், அவற்றின் ஆயுட்காலம் மற்றும் ஆக்கபூர்வமற்ற சொத்துக்கள் என்பவற்றை இனங்காண்பதுடன் அவ்வாறு ஆக்கபூர்வமற்ற சொத்துக்களை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அதே போல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக 2020 ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எனினும் நாட்டில் தொடர்சியாக நிழவுகின்ற தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் இந்த விடயத்தை மேற்கொள்வதற்கு முடியாத நிலை ஒன்று உருவாகியிருக்கின்றது எனவும் மற்றும் 2021 ஆண்டின் போது இவ்விடயத்தை கட்டாயமாக மேற்கொள்வேன் எனவும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டும். 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகள் செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) மீளாய்வாண்டிற்கான வருடாந்த உற்பத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதற்குப் பதிலாக மாதாந்த உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த உற்பத்தித் திட்டம் 2022 ஆண்டு முதல் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருடாந்த உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) விற்பனைத் திட்டத்தின் படி மற்றும் மாதாந்த உற்பத்தி திட்டங்களின் படி இனங்காணப்பட்டிருந்த மொத்த உற்பத்தித் தேவை இடையே 47 வகையான மருந்துகளில் 350 மில்லியன் அலகுகளுக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சில உற்பத்திகளுக்கான சந்தை கேள்வி காணப்பட்ட போதிலும் 2020 ஆண்டின் போது உற்பத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படாததுடன் உண்மையாகவே கிடைத்திருந்த கட்டளைகள் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையை விட மிகை/ குறைவு ஏற்படல் உற்பத்தி இயந்திரங்களில் காணப்படும் உச்சமட்ட கொள்திறன், மாதாந்த கேள்வியின் அடிப்படையில் தயாரிக்கப்படும் உற்பத்தி தேவை அதாவது விற்பனைத் திட்டத்தில் அனைத்து உற்பத்திகளையும் குறிப்பிட்ட காலப் பகுதியில் உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலையில் வசதிகள் காணப்படாமை, மூலப் பொருட்களில் ஏற்பாடும் குறைவுகள் மற்றும் சில உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற தொழிநுட்ப சிக்கல்கள் ஆகிய காரணங்களினால் சில விடயங்கள் திட்டமிட்டுள்ளவாறு | தத்ரூபமான வருடாந்த விற்பனைத் திட்டம் போலவே தத்ரூபமான வருடாந்த உற்பத்தித் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு உச்ச மட்ட முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எண்ணிக்கையை விட கூடுதலாகவும் மற்றும் குறைவாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றது என. | |
| (iii) விற்பனைத் திட்டத்தின் படி இனங்காணப்பட்டிருந்த மொத்த உற்பத்தித் தேவை 28 வகையான மருந்துகளில் 2,077 மில்லியன் அலகுகள் ஆகும். ஆனால் உள்ளவாறான உற்பத்தி 24 வகையான மருந்துகளில் 1,535 மில்லியன் அலகுகள் மாத்திரம் ஆகும். | உண்மையாகவே கிடைத்த கட்டளைகளுக்கு மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையை விட மிகை/ குறைவு ஏற்படல் உற்பத்தி இயந்திரங்களில் காணப்படும் உச்சமட்ட கொள்திறன், மாதாந்த கேள்வியின் அடிப்படையில் தயாரிக்கப்படும் உற்பத்தி தேவை அதாவது விற்பனைத் திட்டத்தில் அனைத்து உற்பத்திகளும் குறிப்பிட்ட காலப் பகுதியில் உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலைகளில் வசதிகள் காணப்படாமை, மூலப் பொருட்களில் ஏற்படும் குறைவுகள் மற்றும் சில உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற தொழிநுட்ப சிக்கல்கள் ஆகிய காரணங்களினால் சில விடயங்களின் உற்பத்தி திட்டமிடப்பட்ட எண்ணிக்கையை விட குறைவாக இருந்தது என. | உச்சமட்ட உற்பத்தி செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வ தன்மையுடன் உற்பத்தி செய்வதற்காக தத்ரூபமான உற்பத்தி மற்றும் விற்பனை திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (iv) விற்பனைத் திட்டத்தின் படி 17 வகையான மருந்து வகைகளின் மொத்தத் உற்பத்தித் தேவை 163 மில்லியன் அலகுகளினால் மிகைத்து 1,206 மில்லியன் அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது அவற்றில் 999 மில்லியன் அலகுகள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மீதியாகக் காணப்பட்ட 207 மில்லியன் அலகுகளில் 3 மருந்து விடயங்களின் 3.07 மில்லியன் அலகுகளுக்காக 2021 ஆம் ஆண்டிற்காகவும் | மதிப்பீட்டு அலகுகளின் எண்ணிக்கையை விட உள்ளவாறான உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு ஒன்று காணப்பட்ட போதிலும் அந்த உற்பத்தியில் பொருட்கள் 3 இல் மிகையாகக் காணப்பட்ட இருப்புத் தவிர ஏனைய உற்பத்திப் பொருட்கள் 2021 ஆண்டிற்கான கட்டளைகளின் அடிப்படையாகக் கொண்டு வழங்க முடியும் எனவும், எனினும் 3 விடயங்களுக்காக 2021 ஆண்டிற்கான மருத்துவ வழங்கள் பிரிவில் இருந்து | உச்சமட்ட உற்பத்தி செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வ தன்மையுடன் உற்பத்தி செய்வதற்காக தத்ரூபமான உற்பத்தி மற்றும் விற்பனை திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அந்தத் திட்டங்கள் காலத்தின் தேவை மற்றும் மாற்றங்களின் படி தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்த்த இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக உச்ச மட்ட அளவில் செயற்பட |

| | | | |
|---|---|---|---|
| | போதும் மருத்துவ வழங்கள் பிரிவில் இருந்து கட்டளைகள் கிடைத்திருக்காமையால் விற்பனை செய்வதற்கு முடியாமல் போயிருந்தது. | கட்டளைகள் கிடைக்கப் பெற்றிருக்காமையால் அந்த இருப்புக்களை விற்பனை செய்வதில் சிக்கல் தன்மை காணப்பட்டது என. | வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டின் போது உற்பத்தி செய்திருந்த மருந்து வகைகளில் மாத்திரைகள் சிறிய பகுதிகளாக உடையக் கூடிய இயலுமை அதிகரித்திருத்தல், மருந்து மாத்திரைகளின் பாரத்தில் ஏற்பட்டுள்ள முரண்கள், கவர்ச்சியற்ற தோற்றம் மற்றும் மருந்து மாத்திரைகள் உடைந்து போவதற்கு காணப்பட்ட வசதியின்மைகள் ஆகிய காரணங்களினால் உற்பத்திகளை இடைநிறுத்தி மீண்டும் உற்பத்தி செய்ய நேரிட்டிருந்த காரணத்தினால் ஏற்பட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 2,563,069 தொகையாக இருந்தது. அனைத்து ஆண்டுகளிலும் உற்பத்திச் செயற்பாடுகளில் ஏற்படுகின்ற இந்த சீரற்ற நிலைமைகளை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாத்திரைகள் சிறிய பகுதிகளாக உடையக் கூடிய இயலுமை அதிகரித்திருத்தல் மற்றும் மருந்து மாத்திரைகளில் பாரத்தில் ஏற்படுகின்ற முரண்கள் என்பன மருந்து உற்பத்தி நடைமுறையில் காணப்படும் சிக்கல்கள் எனவும் அந்த மருந்துகளை மீண்டும் உற்பத்தி செய்யும் போது உயிர்புள்ள புதிய மூலப் பொருட்கள் சேர்க்கப்படமாட்டாது எனவும் அதற்குப் பதிலாக உதவியான மூலப் பொருட்கள் மாத்திரம் சேர்க்கப்படுகின்றது எனவும் உதவி மூலப் பொருட்களின் கிரயம், மீண்டும் உற்பத்தி செய்யும் போது செலவிடப்படும் மேலதிக தொழிற் கிரயம் மற்றும் மேந்தலைச் செலவு ஆகிய கிரயங்கள் மாத்திரம் மீண்டும் மொத்த உற்பத்தி கிரயத்துடன் சேர்க்கப்படுகின்றது என. | மருந்துகளின் பண்புசார் நிலைமையை அதிகரிப்பதற்காக மற்றும் உற்பத்திச் சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | கடந்த இரண்டு ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது ஆய்வு நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்திருந்த மொத்தக் கிரயம் ரூபா 2,042,844 தொகைக்கான 213 கிலோகிராம் மருந்து மூலப் பொருட்கள் 2021 பெப்ரவரி 17 திகதியளவிலும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அவற்றில் 175 கிலோ கிராம் மருந்து மூலப் பொருட்கள் உரிய நியமத்தில் காணப்பட்டிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது. | ஆய்வு நடவடிக்கைளுக்காக கொள்வனவு செய்யப்படும் மூலப் பொருட்கள் புதிய உற்பத்தியை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதன் படி பயன்படுத்தப்படுவதுடன் தரக் குறைவான மூலப் பொருட்கள் 175 கிலோ கிராம் மீண்டும் மாற்றுவதற்கு வழங்குனர் இணங்கியிருந்தார் எனவும். | விற்பனைத் திட்டம் மற்றும் உற்பத்தித் திட்டத்தினை அடிப்படையாக கொண்டு மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யும் திட்டம் தயாரிக்கப்பட்டு மூலப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் புதிய மருந்துகளுக்கான ஆய்வுகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (vii) முன்னைய ஆண்டின் போது அறிமுகப்படுத்தி இருந்த Clarithromycin Tablets USP 500mg ஆகிய மருந்தும், மீளாய்வாண்டின் போது அறிமுகப்படுத்தியிருந்த Clopidogrel 75 mg tablets, Nimodipine tablets 30mg, Tramadol Capsule 50mg, Flucloxacillin capsules 500mg மற்றும் Prednisolone tablets 1mg ஆகிய மருந்துகளின் உற்பத்தி ஆரம்பிக்கப் பட்டிருக்காததுடன் உற்பத்தித் திட்டத்திலும் உட்படுத்தியிருக்கவில்லை. அதன் படி வருடாந்தம் அறிமுகப்படுத்தும் புதிய உற்பத்திகளை தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அதன் காரணமாக உற்பத்தி கலவைக்கு புதிய அறிமுகப்படுத்தல்களின் மூலம் போதியளவு பங்களிப்பு ஒன்று கிடைத்திருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | Clarithromycin Tablets USP 500mg மருந்திற்காக 2020 ஆண்டின் போது மருத்துவ வழங்கள் பிரிவில் இருந்து கட்டளை ஒன்று கிடைத்திருந்தது எனவும், ஏனைய விடயங்கள் 2020 ஆண்டின் கடைசிப் பகுதியில் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தமையால் மருத்துவ வழங்கள் பிரிவில் இருந்து 2021 ஆண்டிற்காக கட்டளைகள் கிடைத்திருப்பதனால் 2021 ஆண்டின் போது இவ் விடயங்களின் உற்பத்தி அலுவல்கள் போலவே மேம்பாட்டு விடயங்களும் மேற்கொள்வதற்கு இயலுமாகும் என. | வருடாந்தம் அறிமுகப்படுத்தும் புதிய உற்பத்திகளை தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும் போதியளவு கவனம் ஒன்று செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் மருந்து விற்பனவு மற்றும் வினியோகம் தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) மூலப் பொருட்கள் இன்மை, இயந்திர கொள்திறன் போதியளவு காணப்படாமை, உற்பத்திச் செயற்பாடுகளில் காணப்படும் தொழிநுட்ப வழுக்கள் ஆகிய பல்வேறு காரணங்களினால் மருத்துவ வழங்கள் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக கட்டளையிடப்பட்டிருந்த மருந்துகளில் விற்பனைப் பெறுமதி ரூபா 1,003 மில்லியன் தொகைக்கான 26 வகையான மருந்து வகைகளில் 570.78 மில்லியன் அலகுகளை | Theophylline ER Tab 125mg உட்பட பல்வேறு வகையான மருந்துகள் மருத்துவ வழங்கள் பிரிவினால் தாமதப்படுத்தும் படி கோரியிருந்ததெனவும் மற்றும் நாட்டில் காணப்பட்ட சூழ்நிலைக்கு மத்தியில் சில மருந்துகளின் தேவை எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படவில்லை என. | மருத்துவ வழங்கள் பிரிவில் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு உச்ச மட்ட முயற்சி எடுத்து சந்தையில் தமது பங்கினை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்ததுடன் அவற்றில் விற்பனை பெறுமதி ரூபா 44.10 மில்லியனுக்கான Theophy.ER Tab 125mg மருந்து வகையில் 30 மில்லியன் அலகுகள் ஆகிய மொத்தத் தேவையையும் வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு இயலாமல் போயிருந்தது. | | |
| (ii) | மீளாய்வாண்டின் போது விற்பனவுப் பெறுமதி ரூபா 616 மில்லியன் தொகைக்கான 28 வகையான 549 மில்லியன் அலகுகளுக்கான உள்நாட்டுச் சந்தை விற்பனை இலக்கினை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அவற்றில் விற்பனைப் பெறுமதி ரூபா 3.92 மில்லியன் தொகைக்கான 5.21 மில்லியன் அலகுகள் விற்பனை இலக்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 02 மருந்து வகைகளில் எண்ணிக்கை எதுவும் விற்பனை செய்வதற்கு முடியாமல் இருந்தது. | 2020 ஆண்டு முற்றாக சில உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி அலுவல்கள் நடைபெறாமை, நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் மத்தியில் சில உற்பத்திகளுக்கான கேள்வி குறைந்திருத்தல், மருத்துவ வழங்கள் பிரிவில் இருந்து மதிப்பிடப்பட்டிருந்த கட்டளை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கைகான கட்டளைகள் கிடைக்கப் பெறல், உரிய நேரத்தில் மூலப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்கு முடியாமை, நிலவிய கொவிட் 19 மத்தியில் உலகச் சந்தையில் மூலப் பொருள் வழங்கும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டிருத்தல் மற்றும் மூலப் பொருட்களின் விலை வழமையல்லாத முறையில் அதிகரித்தல் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளில் காணப்படும் தொழிநுட்ப வழுக்கள் ஆகிய காரணங்களினால் விற்பனை இலக்கினை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது என. | வருடாந்த விற்பனைத் திட்டத்தின் இலக்கினை நோக்கி நெருங்குவதற்கு உச்ச மட்ட முயற்சி எடுக்க வேண்டும். |
| (iii) | விற்பனைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்காத விற்பனை பெறுமதி ரூபா 854 மில்லியனுக்கான 115 மில்லியன் அலகுகள் அடங்கிய | இந்த உற்பத்தி பொருட்கள் விற்பனைத் திட்டத்துள் அடங்கியிருக்காத போதிலும் உள்நாட்டு மருந்து உற்பத்தி கைத்தொழிலை | தத்ருபமாக வருடாந்தம் விற்பனைத் திட்டம் தயாரிக்கப்பட்டு தேவையின் அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | மருந்துகள் மற்றும் ஏனைய 30 விடயங்கள் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்தது. | முன்னேற்றுதல் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை ஒன்றாக இருப்பதனால் இறக்குமதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அநேகமான மருந்து உற்பத்திகள் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | திருத்தப்பட வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொதி செய்யும் பொருட்கள் இருப்பில் உள்ளடங்கியுள்ள ரூபா 314,716 தொகை கிரயத்தையுடைய 60ml பிளாஸ்டிக் போத்தல்கள் 20,200 தொகை 2013 திசெம்பர் முதல் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த போத்தல்களில் பொதி செய்வதற்காக எதிர்பார்த்திருந்த உற்பத்தி பொருட்கள் தொடர்ந்தும் அந்த போத்தல்களில் பொதி செய்யப்படாமையால் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதெனவும் மற்றும் தற்போது உக்கியுள்ளமையால் முறைப்பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | முறைப் பிரகாரம் அப்புறப்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2017 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப் பகுதியில் பண்டங்களின் தீர்த்தல் கம்பனிகள் 23 இல் வைப்புச் செய்திருந்த ரூபா 736,000 தொகையினை திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில வைப்புக்கள் தற்போது திருப்பிப் பெறப்பட்டுள்ளது எனவும், திருப்பிப் பெற்றுக் கொள்ள முடியாத வைப்புக்களை பெற்றுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், கொரோனா தொற்று நோய் காரணமாக அநேகமான தீர்த்தல் கம்பனிகள் மூடப்பட்டு அத்தியவசிய தேவைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தமை யால் மற்றும் நிகழ்வு நிலையில் செயற்படுவதினால் வைப்புக்களை திருப்பிப் பெறுதல் கடினமாக இருந்தது என. | தீர்த்தல்கள் முடிவடைந்தவுடன் வைப்புக்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மருந்து மூலப் பொருட்கள் மற்றும் பொதி செய்யும் பொருட்கள் ஆகியன கொள்வனவு செய்யும் போது செயற்படுத்தப்பட்டு இருந்த பெறுகை நடவடிக்கை முறை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (அ) தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழு என்பவற்றின் அங்கீகாரத்திற்கு முன்னர் மற்றும் உடன்படிக்கைகள் கையொப்பம் இடுவதற்கு முன்னர் வழங்குனருக்கு கட்டளைகள் அனுப்பப்பட்டிருந்தன. | சில விடயங்களின் இருப்பு மட்டத்தின் படி விரைவாக பெற்றுக் கொள்ளும் தேவைக்காக தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக் குழு என்பவற்றின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு அக் குழுக்களின் அணவல் அங்கீகாரத்தின் கீழ் வழங்குனருக்கு கட்டளைகள் அனுப்பப்படுகின்றது எனவும் தொழிநுட்ப மதிப்பாய்வு குழு மற்றும் பெறுகைக் குழு என்பவற்றின் அணவல் அங்கீகாரம் பின்னர் பெறப்பட்டுள்ளது என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.3 (அ) வழிகாட்டலின் பிரகாரம் விலைகூறல்களை திறக்கும் குழுக்கள் நியமனம் செய்திருக்காததுடன் 6.3.6 வழிகாட்டலின் பிரகாரம், விலைகூறல்களை திறத்தல் தொடர்பான விடயங்கள் குறிப்பிட்ட படிவத்தில் அறிவித்திருக்கவில்லை. | தேவையின் அடிப்படையில் காணப்படும் அங்கீகாரங்களை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.10 (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றுகை பாதுகாப்புமுறி பெற்றிருக்கவில்லை. | வழங்குனர்கள் செயலாற்றுகை முறி பாதுகாப்பு வழங்கியிருக்காத சந்தர்ப்பங்களில் அதற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகையில் 10 சதவீதம் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் மற்றும் உள்நாட்டு | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டலின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குனர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது 30 நாட்கள் முதல் 60 நாட்கள் வரை மொத்தத் தொகைக்கான கடன் காலவறை ஒன்று கூட்டுத் தாபனத்தினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது என. | |
| (ஈ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 500,000 தொகையை மிகைத்துள்ள பண்டங்கள் மற்றும் சேவைகள் ஒப்பந்த வேலைகள் தொடர்பாக முறையான உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டு இருக்காததுடன் பொதுவான ஒப்பந்த சட்டத்தின் படி ஒப்பந்த வேலை பதிவு செய்யும் சான்றிதழ் வழங்குனரிடம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | கொரோனா தொற்றுநோயின் காரணமாக ஆனேகமாக வழங்கும் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த போது மற்றும் கூட்டுத்தாபனம் மிகவும் குறைந்த ஊழியர் எண்ணிக்கையுடன் நடாத்திச் சென்ற சந்தர்ப்பத்தில் ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒப்பந்த வேலையை பதிவு செய்யும் சான்றிதழ் (PCA4 படிவம்) மீது தங்கியிருக்காமல் இறுதி குறிக்கோளாகிய் இருப்புகளை பேணிச் செல்ல வேண்டிய அலுவல்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும் மற்றும் இங்கு ஏற்படக் கூடிய ஆபத்து நிலைமையை குறைப்பதற்காக வழங்குனர் தொடர்பாக தொடர்ச்சியான கவனத்துடன் செயற்பட்டது எனவும். | - மேற்படி - |

### 3.5 பங்குடைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டில் மருந்துகள் உற்பத்தி செய்யும் செயற்பாடுகளை விரிவாக்குவதற்காக அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுத்தமாக தனியார் முதலீட்டாளர் கடன் பங்குடைமையை ஆரம்பிப்பதற்கான திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தினால் சாத்தியமான 15 மூதலீட்டாளர்களுடன் மருந்துகள் வழங்குவதற்காக 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த பங்குடைமையுடன் கூட்டுத்தாபனம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொண்டிருந்த முறை தொடர்பாக | | |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | 15 முதலீட்டாளர்களுடன் மருந்து வழங்குவதற்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி அளவில் மூன்று முதலீட்டாளர்களிடம் மாத்திரம் மருந்துகள் கொள்வனவு செய்திருந்தனர். | மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்து வழங்குவதற்கு தேவையான தொழிற்சாலை வசதிகள் மற்றும் தகைமைகளைஇரண்டு முதலீட்டாளர்கள் மாத்திரம் பூர்த்தி செய்திருந்தனர். | அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகபூர்வ குழுவினால் பரிந்துரைக்கப் பட்டுள்ளவாறு செயற்பட வேண்டியிருந்ததுடன், உடன்படிக்கை மேற்கொண்டிருந்த ஏனைய முதலீட்டாளர்களின் நிலைமை தொடர்பாக தொடர்ச்சியாக தொடர் செயல் நடவடிக்கை எடுத்து செயற்பட வேண்டும். |
| (ஆ) | பங்குடைமை நிருவுவதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினால் மருந்து வழங்குவதற்காக உடன்படிக்கை அந்த மருந்து உற்பத்தியாளர் (Producer) உடன் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் உற்பத்தியாளர் அல்லாத இடை வழங்குனர் மாத்திரம் ஆகிய முதலீட்டாளர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு வழங்கல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கை 2020 மே 30 திகதி காலவதியாகி செல்லுபடி அற்றதாகியுள்ளது. எனவும், அதன் பின்னர் Glosante Pvt. Ltd. நிறுவனம், கூட்டுத்தாபனத்துடன் பங்குடைமைக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்படின், அவர்களால் வழங்கப்பட வேண்டியது அவர்களின் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் மாத்திரம் எனவும், இங்கு தொழிற்சாலையில் பெற்றுக்கொண்ட GMP சான்றிதழ், உற்பத்தி அனுமதிப்பத்திரம் மற்றும் தேசிய ஔதட ஒழுங்கமைப்பு அதிகார சபையில் (NMRA) பதிவு செய்த சான்றிதழ் அந்த நிறுவனத்தின் பெயரில் பெற்றிருந்த | அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகபூர்வ குழுவினால் பரிந்துரைக்கப் பட்டிருந்தவாறு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சான்றிதழ்களாக இருக்க வேண்டியதெனவும் மற்றும் அவர்கள் தற்போது பதிவு செய்வதற்காக NMRA இற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென அறிவித்துள்ளார்கள் எனவும். | |
| (இ) | பங்குடைமை உடன்படிக்கையின் படி முதலீட்டாளரினால் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் மற்றும் அறுவை நுகர்வுப் பண்டங்கள் உற்பத்தி கிரயத்திற்கு 20 சதவீத இலாப எல்லையொன்று கூட்டப்பட்டு விற்பனை விலை தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறான ஒரு முதலீட்டாளரிடம் பெறப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த 06 மருந்து விடயங்களின் மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 823,010,169 தொகையாக காணப்பட்டது. அதற்கு ரூபா 129,898,488 இற்கான இலாபம் சேர்த்தப்பட்டு இன்வொயிஸ் பெறுமதி ரூபா 952,908,657 தொகைக்கு கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் அந்த இன்வொயிஸ் பெறுமதியுடன் மேலும் ரூபா 66,692,327 இற்கான சேவைக் கட்டணம் கூட்டப்பட்டு ரூபா 1,019,600,983 தொகைக்கு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அந்த 06 மருந்துகளின் மொத்தக் கிரயத்தில் 16 சதவீதம் இலாப எல்லை ஒன்று முதலீட்டாளரினாலும் இன்வொயிஸ் விலையின் 7 சதவீதம் சேவைக் கட்டணம் ஒன்று கூட்டுத்தாபனத்தினாலும் உழைக்கப்பட்டிருந்தது. அதன்படி, மொத்த உற்பத்திக் கிரயத்தில் 23 சதவீதம் இலாம் மற்றும் சேவைக் கட்டணம் கூட்டப்பட்டு விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. | அரச நிறுவனம் என்ற வகையில் மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யும் போது கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், எனினும் தனியார் முதலீட்டாளர்களுக்கு அவர்களின் அலகிற்கான கிரயம் குறைவடையும் விதத்தில் மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யும் இயலுமை காணப்படுவதனால் விற்பனை விலை தீர்மானிக்கும் போது கூட்டுத்தாபனத்தின் சேவைக் கட்டணம் கூடிய பெறுமதி ஒன்றை காட்டுகின்றன என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பங்குடைமையினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கியிருந்த 43 மருந்து விடயங்களில் 36 மருந்து விடயங்களுக்காக மாத்திரம் கூட்டுத்தாபனத்தினால் தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 03 அறுவை நுகர்வுப் பொருள் விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கியிருந்த போதிலும் அந்த பண்டங்களின் தரப் பரிசோதனை செய்வதற்கு தேவையான வசதிகள் கூட்டுத்தாபனத்தில் காணப்படாமையால் வழங்குனர்களாலேயே ஒவ்வொரு உற்பத்தி தொகுதிகளின் மாதிரிகள் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (ITI) அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் பரிசோதனை அறிக்கையின் படி மாத்திரம் மருந்துகளின் தரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி பங்குடைமையின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்படும் மருந்துகளின் தரங்கள் தொடர்பாக போதியளவு சுதந்திரமான உறுதிப்பாடொன்றினை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது அறுவை நுகர்வுப் பண்டங்கள் 03 விடயங்கள் கொள்வனவு செய்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (ITI)அனுப்பப்பட்டு தரப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தரச் சான்றிதழ் மீது எனவும் மற்றும் காணப்படும் முறைமையில் உரிய அறுவை உபகரணங்கள் பரிசோதனை செய்யும் வசதிகள் காணப்படவில்லை எனவும். | பங்குடைமையின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்படும் மருந்துகளின் தரம் தொடர்பாக போதியளவு சுதந்திரமான உறுதிப்படுத்தல் ஒன்று கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.6 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிப்படைத் தன்மையின்றி மற்றும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் சில வழிகாட்டல்கள் கடைபிடிக்கப்படாமல் நிர்மாண வேலைகள் தொடர்பாக உசாத்துணையாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டிருத்தல், ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட | கூட்டுத்தாபனத்தின் நிர்மாண வேலைச் செயற்திட்டங்களின் மேற்பார்வை உற்பட சிவில் பொறியியலாளர் கருமங்களுக்காக சிவில் பொறியியலாளர் ஒருவர் காணப்படவில்லை எனவும், நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கான தேவையான அனைத்து பொறியியலாளர் | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க ஒப்பந்த வேலைகளின் நிர்வாக அலுவல்கள் முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்விடயங்கள் சிறந்த முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய நாட்கள் மற்றும் தாமதக் கட்டணம் தொடர்பான நிபந்தனைகள் உடன்படிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்காமை, உரிய அங்கீகாரம் இன்றி தொடர்ச்சியாக ஆரம்ப வரைபுகளை மாற்றுதல், வரைபுகள் மற்றும் கணியப்பட்டிகளுக்கு இணங்காத வகையில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளல், நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் குறிக்கோள் மாற்றமடைதல் மற்றும் நிர்மாண வேலை ஒப்பந்தங்களின் காலப்பகுதியில் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் ஒப்பந்தப் பெறுமதி அதிகரித்துச் செல்வதினால் ஒப்பந்தக் காலப்பகுதியில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு இயலாமல் போதல் போலவே ஒப்பந்த வேலையை நிறைவேற்றும் காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரினால் போதியளவு மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாக நான்கு மாடி வசதிகளை கொண்ட கட்டடம் நிர்மாணித்தல், மேம்பாலம் நிர்மாணித்தல், உருக்குக் கட்டமைப்பு பண்டகசாலை நிர்மாணித்தல், Penicillin Zone களஞ்சியம் Cephalosporin Production பிரிவு என மாற்றும் மற்றும் புலத்சிங்கள கட்டடத்தை நவீனமயப்படுத்தல் போன்ற கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்த வேலைகளின் நிர்வாகம் பலவீன மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | கருமங்களும் மேற்கொள்ளப்படுவதுடன், உசாத்துணைக் கம்பனிகளின் உதவிகளையும் பெற்று கூட்டுத்தாபனத்தின் பொறியியற் பிரிவினால் இது தொடர்பான அனைத்து கடமைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என, இவ்விடயங்களை கவனத்தில் எடுத்து கட்டட நிர்மாணித்தல் போலவே அக்கட்டடங்களை பராமரித்து பேணிச் செல்லும் தேவையின் மீது நிறுவனத்திற்கு புதிய சிவில் பொறியியலாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும், எதிர்காலத்தில் அப்பதவிக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, இந்த மேற்பார்வைகள் மற்றும் நிர்வாக குறைபாடுகளை தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முகாமைத்துவம் செய்வது போலவே மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | Penicillin Zone களஞ்சியம் Cephalosporin Production பிரிவு | இந்த தொழிற்சாலைக் கட்டடத்தின் நிர்மான வேலைகள் | ஒப்பந்த வேலைப் பெறுமதியை மிகைத்து |

என மாற்றப்பட்டு G வலயம் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த வேலை மொத்த ஒப்பந்த பெறுமதி ரூபா 80,510,608 ஆக காணப்பட்ட போதிலும் 2020 பெப்ரவரி 19 திகதி வரை திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 11,918,835 தொகையினால் மிகையாக வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஆரம்பிக்கப்பட்டது, வரைபு மற்றும் கட்டட அடிப்படை மீது (Design & Build basis) கூட்டுத்தாபனத்தில் அப்போது சேவையாற்றிய செயற்திட்ட முகாமையாளரின் மேற்பார்வையின் கீழ் எனினும், இந்த நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போது இவ்வாறான மருந்து தொழிற்சாலை நிர்மாணித்தல் விஷேட விடயமொன்றாக காணப்படுவதுடன் இலங்கையில் இவ்வாறான நிர்மாண வேலை ஒன்று மேற்கொள்ளும் போது உசாத்துணை மற்றும் மேற்பார்வைக்கான அனுபவம் மிகவும் குறைவாக காணப்படுகின்றது என தோன்றியது எனவும், இந்த நிர்மாண வேலைக்கான கேள்வியினை விடயப் பரப்புக்கு இணங்க பூர்த்தி செய்யப்பட்டு 2019 ஆகஸ்ட் 09 திகதி கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்காக குறிப்பிட்ட நிர்மாண வேலைக் கம்பனி நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் ஔடத ஒழுங்கமைப்பு அதிகார சபையின் அங்கீகாரத்தின் படி உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்வதற்காக மேலதிக நிர்மாண வேலைக் கருமங்கள் மற்றும் முரண்கள் (Extra works & variations) மேற்கொள்வதற்கு நேரிட்டதெனவும் மற்றும் ஒப்பந்த வேலை பெறுமதியை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த கூறுவிலைகள் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி பில் பத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த பெறுமதியை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளுக்காக திணைக்கள பெறுகை குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக திணைக்கள தொழில்நுட்ப

நிறைவேற்றப்பட்டுள்ள வேலைகளுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது என. | |
| (இ) | இரண்டு கட்டடங்களை இணைக்கும் உத்தேச மேம்பாலம் நிர்மாணிப்பதற்காக 2021 பெப்ரவரி 18 திகதி வரை ரூபா 6,016,902 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இதன் நிர்மாண வேலைகள் இடைநிறுத்துவதற்காக நிர்வாக அதிகாரசபை தீர்மானிக்கப்பட்டிருந்ததால், செலவிடப்பட்டிருந்த தொகை பயனற்ற செலவொன்றாக மாறியுள்ளது. | இந்த செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லல் பொருளாதார ரீதியற்றமையால் செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்காக தீர்மாணிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய முன்வரக் கூடிய வேலைகளுக்காக பணிப்பாளர் சபையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளன என. | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்றின்றி இந்தச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு பங்களிப்பு செய்த பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை கண்டறிதல் மற்றும் செலவிடப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நான்கு மாடி நிர்வாக கட்டடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 28,952,527 தொகை செலவிடப்பட்டு 2018 மார்ச் 07 திகதியளவில் நிலக் கீழ்ப்பகுதி Piling வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 ஜூலை 31 திகதி கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிர்வாக கட்டட நிர்மாண வேலைகளுக்காக 2018 மார்ச் 07 திகதி அளவில் நிலக் கீழ்ப்பகுதி Piling வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டடத்தின் நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்த வேலைகள் அப்போது வழங்கப்பட்டிருக்காததுடன், 2019 ஆண்டின் போது இதற்காக விலைகூறல்கள் அழைக்கப்பட்டிருந்ததெனவும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகூறல்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வு செய்வதற்காக அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது எனவும், கடந்த காலப் பகுதியில் நிறைவேற்றப்பட்டிருந்த நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகள் தொடர்பாக அனுபவத்தின் மூலம் இந்தக் கட்டடத்தின் நிர்மாண வேலை வரைபு மீண்டும் கவனம் செலுத்தப்பட்டு மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திடமிருந்து பயிலின்களுக்காக பகுப்பாய்வுத் தர அறிக்கை ஒன்று (piling condition analysis report) | ஒப்பந்த வேலைகளின் நிர்வாக அலுவல்களுக்காக அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்விடயங்களை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் போலவே மேற்பார்வை செய்வற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெறப்பட்டு மீண்டும் நிர்மாண வேலை திட்டமிடுவதற்காக கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மற்றும் எதிர்காலத்தில் கட்டடம் நிர்மாணிப்படும் எனவும். | |
| (உ) | இரண்டு மாடி களஞ்சியக் கட்டடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2018 செம்தம்பர் 21 திகதி நிர்மாண வேலை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2021 பெப்ரவரி 19 திகதி அளவில் இதற்காக ரூபா 36,045,249 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆகஸ்ட் 21 திகதியளவில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 பெப்ரவரி 19 திகதி அளவிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.<br>எவ்வாறாயினும், திட்டமிடப்பட்ட கொள்திறனுடன் போதியளவு கட்டமைப்புடனான கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்காத காரணத்தினால் கட்டடத்தின் கட்டமைப்பு மீண்டும் மீளாய்வு செய்வதற்காக 2020 ஒக்தோபர் 06 திகதி மத்திய பொறியியல் உசாத்துணை பணியக (CECB) த்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்கத்திடம் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த பணம் தாமதம் அடைந்த காரணத்தினால் கொடுப்பனவு செய்தல் தாமதம் அடைதல், கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் ஆரம்ப வரைபில் மாற்றங்கள் மேற்கொள்ளல் இந்தக் கட்டடத்தின் நிர்மாண வேலைகளின் தாமதத்திற்கு காரணமாக இருந்ததெனவும், மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் (CECB) இந்த கட்டடத்தின் உருக்கு கட்டமைப்புப் பகுப்பாய்வு (steel structure design analysis) இனால் மேற்கொள்ளப்பட்டதென, அத்திவாரத்தில் மீண்டும் கவனம் ஒன்று செலுத்துதல் (verification) மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது எனவும், அதன்படி மண் பரிசோதனை (soil investigation) மேற்கொண்டிருந்த M/S Soil Matter Pvt Ltd நிறுவனத்திடம் மீண்டும் அறிக்கை ஒன்று பெற்றுக்கொண்டிருந்ததெனவும், CECB நிறுவனத்தின் இறுதி வரைபு மீளாய்வு அறிக்கை 2021 பெப்ரவரி 25 திகதி வழங்கியிருந்ததெனவும் மற்றும் அதன்படி தற்போது வரைபு மீளாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு நிர்மாண வேலைக் கம்பனியினால் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | - மேற்படி - |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 353 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 302 தொகையும் வெற்றிடங்கள் 67 உம் மற்றும் மிகை ஊழியர் எண்ணிக்கை 16 உம் காணப்பட்டன. வெற்றிடமாக காணப்பட்ட 06 நிறைவேற்றுத் தர பதவிகள் உட்பட அத்தியவசிய பதவிகளுக்கான உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்கும் மிகைப் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி மற்றும் வெளியிடப்பட்டிருந்த முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் படி வெற்றிடமாக காணப்படும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், பல பதவிகளுக்காக ஆட்சேர்ப்பும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் மருந்து பூர்த்தி செய்யும் உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி பகிரங்க அறிவித்தல் அல்லது பத்திரிகை அறிவித்தல் மூலம் குறிப்பிட்ட பதவிக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகைமையுடைய உத்தியோகத்தர்களை சேர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மேற்கூறிய நடைமுறைக்கு புறம்பாக கூட்டுத்தாபனத்திற்கு சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவை அமைச்சரின் இணைப்புச் செயலாளரிடம் கிடைத்திருந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களின் 17 | மருந்து பூர்த்தி செய்யும் உதவியாளர்களின் தேவையினை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு அங்கீகாரம் கோரியதுடன், covid – 19 தொற்றுநோய் நிலமை காரணமாக மருந்துகள் பொதி செய்வதில் ஏற்பட்டிருந்த ஊழியர் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டிருந்த சிக்கல் தன்மையான நிலமைக்கு பரிகாரம் ஒன்றாக சுகாதார அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் இந்த ஊழியர்கள் சேர்க்கப்பட்டனர் எனவும். | அனைத்து ஆட்சேர்ப்புக்களும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்குஇணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதின் முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், காலப் பகுதியுள் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் செயலாற்றலை மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு செயலாற்றல் தேர்வு முறைகளை (Key Performance Indicators) உட்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியருந்த செயற்பாடுகளில் செயலாற்றல் தேர்வு முறைகள் அறுதியாக, போதியளவினதாக அளவீடு செய்யக் கூடிய மட்டத்தில் காட்டியிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ளும் முன்னேற்றத்தை அறுதியாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் நிறுவனத்தின் செயற்பாடொன்றாக காணப்பட்ட போதிலும் 2020 ஆண்டின் போது சுகாதார அமைச்சிலிருந்த அனுப்பியிருந்த படிவத்தின் படி அதனை தயாரிப்பதற்கு நேரிட்டது என. | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 875.8 மில்லியனிற்கான 91 செயற்பாடுகளில் ரூபா 735.9 மில்லியனிற்காக 51 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், 14 செயற்பாடுகள் மீளாய்வாணடின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மூன்று திணைக்களங்களுக்கான செயற்பாடுகள் எதுவும் மீளாய்வாண்டின் போது நெருங்கியிருந்த பௌதீக முன்னேற்றத்தினை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | சுகாதார அமைச்சிலிருந்து அனுப்பப்பட்டிருந்த படிவத்தின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது நிதி முன்னேற்றத்தை அளவிடக்கூடியதாக இருந்தது. குறிப்பிட்ட படிவத்தில் காட்டப்பட்டிருந்த பௌதீக முன்னேற்றம் சதவீதப்படி எனக் காட்டப்பட்டிருந்த வரிசையின் படி எனவும், மற்றும் அதன்படி பௌதீக முன்னேற்றத்தின் சதவீதப்படியான பெறுமதியின் மூலம் எவ்வளவு நிதி முன்னேற்றம் காணப்படுகின்றது என அளவீடு செய்யக்கூடியாத இருந்தது என. | 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |